கவனிக்க .- 2025.09.12 ஆந் திகதிய 2454 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2455 - 2025 සැප්තැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.09.19

2455ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1572 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1574 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1575 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 26ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1571 - B 82720 - 403 (2025/09)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### விவசாயம், நீர்ப்பாசனம் , நிலங்கள் மற்றும் கால்நடை அமைச்சு

### நில அளவைத் திணைக்களம்

### கேள்விமனு அறிவித்தல்

பிராந்திய ஆய்வு அலுவலகங்களுக்களுக்கான கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் - 2025

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2025.10.01ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி.ப.2.05 மணிக்கு திறக்கப்படும்.

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பலாங்கொடை | மாகாண சர்வேயர் ஜெனரல் (சப்பிரகமுவ மாகாணம்). மாகாண சர்வேயர் பொது அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | பலாங்கொடையைச் சுற்றியுள்ள நகரம் | 2026.01.01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பெல்மதுல்ல | மாகாண சர்வேயர் ஜெனரல் (சப்பிரகமுவ மாகாணம்). மாகாண சர்வேயர் பொது அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | பெல்மதுல்லவைச் சுற்றியுள்ள நகரம் | 2026.11.01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | கலவானா | மாகாண சர்வேயர் ஜெனரல் (சப்பிரகமுவ மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | கலவானயைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.11.01 |

**பூரணப்படுத்தப்படவேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்:**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருந்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவிற்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்கு செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலகர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இட வசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் ( இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு

2025.10.01ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

வை.ஜீ. ஞானதிலக்க,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு -05.
2025, செத்தெம்பர் 11.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2025**

**விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம் - 2025**

**கட்டிட உரிமையாளருக்காக:**

01. முழுப் பெயர்: ................
02. முகவரி: ................
03. தொலைபேசி இலக்கம்: ................
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ................

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்தப் பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? ................
02. மாதாந்த வாடகைத் தொகை?
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ: ................
05. இடத்தின் விஸ்தீரணம்: ................
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள்: ................
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா?: ...............
08. தனியாக அவதானிக்கக் கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா?: ................
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் ( மதில்/ கம்பி/ வேலி): ................
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை: ................
11. கம்பி மூலம் தொலைபேசி தொடர்பு உள்ளதா?: ................

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானவை எனத் தெரிய வரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ................

09- 182

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய 2025, செத்தெம்பர் 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 08 இன் விதிகளுக்கு அமைவாக ட்ரவிமா லங்கா (பிவீடீ) எல்டீடி தனது பெயரை சிரின்ங் (பீவீடீ) எல்டீடி என மாற்றம் செய்துள்ளது என இத்தால் அறிவித்தல் விடுக்கின்றது.

*கம்பனியின் பழைய பெயர் :* ட்ரவிமா லங்கா (பிவீடீ) எல்டீடி
*கம்பனியின் இலக்கம் :* PV 123899
*பதிவு அலுவலகம்:* லொட் இல.1 வகவத்த BOI கைத்தொழில் பேட்டை, வகவத்த, ஹொரண
*கம்பனியின் புதிய பெயர் :* சிரின்ங் (பிவீடீ) எல்டீடி

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்,
சிரின்ங் (பிவீடீ) எல்டீடி.

09-215

---

### மூலதனக்குறைப்பை முன்மொழியும் பொது அறிவித்தல்

**இன்சைட் ஹோல்டிங்ஸ் (பிவிடி)எல்டிடி**
**கம்பனி பதிவு இல. PV 70894**

**2007 ஆண்டுன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டம் பிரிவு 59 இன் உப பிரிவு 2 அடிப்படையில்**

இதனால் அறிவிக்கப்படுவது, இன்சைட் ஹோல்டிங்ஸ் (பிவிடி) லிமிடெட் கம்பனியின் இயக்குநர் சபையினால் கம்பனியின் தற்போதைய பங்கு மூலதனமான ரூ.364,448,900 (முந்நூற்று அறுபத்து நான்கு மில்லியன் நாநூற்று நாற்பத்து எட்டு ஆயிரத்து தொள்ளாயிரம் ரூபா) குறைத்து ரூ.354,448,900 (முந்நூற்று ஐம்பத்து நான்கு மில்லியன் நாநூற்று நாற்பத்து எட்டு ஆயிரத்து தொள்ளாயிரம் ரூபா) ஆகக் குறைக்க பங்குதாரர்களிடம் பரிந்துரைக்க தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானமானது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59 இற்கு கீழ் மேற்கொள்ளப்படுகின்றது என்பதோடு இதற்கான விஷேட தீர்மானம் 2025, நவெம்பர் 18 ஆந் திகதியன்று பங்குதாரர்களால் நிறைவேற்றப்படும்.

கம்பனி சட்டத்தின் பிரிவு 59 இன்படி நிறைவேற்றப்படும் சுற்றறிக்கை தீர்மானம் மூலதனக் குறைப்பை அங்கீகரித்த தாகக் கருதப்படும். இத்துடன் தொடர்புடைய இயக்குநர்கள் தீர்மானம் மற்றும் பிற ஆவணங்கள் கம்பனி வருமதியாளர்கள் அல்லது ஏதேனும் ஆர்வமுள்ளவர்கள், கம்பனியின் செயலாளராக உள்ள Businessmate (Private) Limited (PV 8017) இல. 45, பிரேப்ரூக் தெரு, கொழும்பு02 என்ற முகவரியில் அலுவலக நேரங்களில் பெறுமுடியும். அல்லது info.businessmatelk@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் கோரிக்கையை அனுப்பி பெற முடியும்.

இன்சைட் ஹோல்டிங்ஸ் (பிவிடி) எல்டிடி (PV 70894)
இயக்குநர் சபையின் உத்தரவின்படி,

Businessmate (Private)
Limited, (PV 8017),
கம்பனி செயலாளர்.

2025, செத்தெம்பர் 19.

09-212

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், 2025, ஓகத்து 18 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் முன்னாள் பெயர் :* எல் ஓ எல் சீ மோட்டர்ஸ் வன் ( பிரைவட்) லிமிட்டட்
*பதிவு இல. :* PV00268217
பதிவு முகவரி; 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய
*கம்பனியின் புதிய பெயர்:* எல் ஓ எல் சீ மோட்டர்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்

LOLC கோப்பரேட் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

2025,செத்தெம்பர் 04.

09-180

---

## ஒன்றிணைந்த அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) (b)ஆம் பிரிவுக்கு அமைவாக

ஜனசக்தி பிஸ்னெஸ் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனம் ஜனசக்தி லிமிட்டட் என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பிற்கான தீர்மானம்

ஒன்றை ஜனசக்தி பிஸ்னெஸ் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட் ( கம்பனி இலக்கம் PV 78281 மற்றும் ஜனசக்தி லிமிட்டட் ( கம்பனி இலக்கம் PB 613 PQ/ PB) ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளன என்பதோடு, அதன் மூலம் ஜனசக்தி பிஸ்னெஸ் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிட்டட் மற்றும் ஜனசக்தி லிமிட்டட் ஆகிய நிறுவனங்கள் ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதோடு ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் ஜனசக்தி லிமிட்டட் ஆகும்.

மேற்சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 2025, ஒற்றோபர் 22 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஜனசக்தி லிமிட்டட்,
ஜனசக்தி பிஸ்னெஸ் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்.

09-154

---

# ஏல விற்பனைகள்

**இலங்கை வங்கி**

ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

கடன் தொடர்பு இல. 88155374, 88156274.

இல.465, கனஹேன, பத்தரமுல்ல என்ற முகவரியிலுள்ள சுபாஷ் அன்ட் சேச்சில் கார் சென்ரர் நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக இல. 465, கனஹேன, பத்தரமுல்ல என்ற முகவரியில் அமைந்துள்ள ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.27ஆந் திகதி 2356ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.10.24 ஆந் திகதி தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை யையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவுகளையும் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரி. துசித்த கருணாரத்ன அவர்கள் 2025.10.23 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

கனேவத்தை என அறியப்படும் கனஹேனஅலியாஸ் ககேனவத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.என்.ஏ.அல்விஸ் தயாரித்த 2018.09.25ஆந் திகதிய 6953 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு XI என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 186/B, கடுவெல வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று, கடுவெல மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குட்பட்ட 492B பத்தரமுல்ல வடக்கு: கிராம அலுவலர் பிரிவிலுள்ள கடுவெல வீதி மருங்கில் பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளது - வடக்கு: கடுவெல வீதி, காணித்துண்டு X2 என்பவற்றையும்; கிழக்கு: காணித்துண்டுகள் X2, X3 என்பவற்றையும்; தெற்கு: காணித்துண்டு X3 ஐயும்; மேற்கு: பாதை, கடுவெல வீதி என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி 6953 ஆம் இலக்க வரைபடத்தில் பதினேழு தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச் (00ஏ. 00றூ. 17.90பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு ஐந்து மூன்று (ஹெக்டயர் 0.0453) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் B 345/ 113 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கனேவத்தை என அறியப்படும் கனஹேன அலியாஸ் ககேனவத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. என். ஏ. அல்விஸ் தயாரித்த 2018.09.25 ஆந் திகதிய 6953 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு X3 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 186/ 1, கடுவெல வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று, கடுவெல மாநகரசபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகுட்பட்ட 492B பத்தரமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள கடுவெல வீதி மருங்கில் பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கு: காணித்துண்டு X1, X2 மற்றும் வீதி என்பவற்றையும்; கிழக்கு: வீதி மற்றும் 1321 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 2 என்பவற்றையும்; தெற்கு: 1321 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 2 மற்றும் வீதி என்பவற்றையும் ; மேற்கு : வீதி மற்றும் காணித்துண்டு X1 என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பன்னிரெண்டு தசம் மூன்று ஐந்து பேர்ச் (00ஏ.00றூ.12.35பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஒன்று இரண்டு (ஹெக்டயார் 0.0312 ) பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் B1587/ 62 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1. **பணம் செலுத்தும் முறை**: ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம் கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்) ;
2. (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்);

3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்) ;
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்);
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்;
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்.

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% ( பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் 80% ( எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும். விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணத்தையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்கான பிரவேச வழி.-**

கடுவெல வீதி என அறியப்படும் புதிய கொழும்பு- கண்டி வீதியிலுள்ள பத்தரமுல்ல பேருந்து நிலையத்திலிருந்து கடுவெல நோக்கி 750 மீற்றர் பயணித்தால் பத்தரமுல்ல கூட்டுறவுச் சங்கத்துக்கு நேரெதிராக வீதியின் வலது புறத்தில் ஆதனங்கள் இருக்குமிடத்தை அடைய முடியும். காணித்துண்டு XI ஆனது அதன் வடக்கு எல்லையையும் வீதியையும் நோக்கியவாறு அமைந்திருக்க காணித்துண்டு X3 அதன் கிழக்கு மற்றும் மேற்குப் புற எல்லைகளையும் வீடுகளுக்குச் செல்லும் உட்பாதையையும் நோக்கியவாறு காணித்துண்டு XI இற்குப் பின்புறம் அமைந்துள்ளது. மாலபே சந்தியிலிருந்து புதிய கொழும்பு- கண்டி வீதியினூடாக 3.7 கி.மீ. பயணித்து இவ்வாதனங்களை அடைய முடியும். இவ்வழியில் வரும்போது ஆதனங்கள் வீதியின் இடது புறத்தே அமைந்திருக்கும். இவ்வாதனங்களுக்கு இட்டுச் செல்லும் பாதைகள் அரசினதும் தனியாரினதுமாக இருப்பதோடு மோட்டார் வாகனத்தில் பயணிக்கக்கூடிய வசதியையும் பாதை ஒதுக்கங்கள் மீதான வழியுரிமையையும் கொண்டுள்ளன.

"ஏலவிலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் தலைநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வைப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரைத் தொடர்பு கொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம்- 0112329087."

***குறிப்பு-*** இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21 மற்றும் 22 என்பவற்றுக்கமைய அரச வர்த்தமானியிலும் நாளேடுகளிலும் தீர்மான அறிவித்தலையும் ஏலவிற்பனை அறிவித்தலையும் முறையே 2023.10.24 மற்றும் 2023.12.22 ஆகிய திகதிகளில் வெளியிட்டதன் பின்னர், 88155374 என்ற இலக்கத்தைக் கொண்ட கடன் வசதியின் முதல் நிலுவை மீது 2024.02.05. ஆந் திகதியன்று 503,004,74 ரூபாவையும் அக்கடன் மீது கூறப்பட்ட வட்டி 270, 000.00 ரூபாவையும் 88156274 என்ற இலக்கத்தைக் கொண்ட கடன் மீது 2024.02.05 ஆந் திகதியன்று முதல் நிலுவை மீது 1,592, 935.22 ரூபாவையும் அக்கடன் மீது கூறப்பட்ட வட்டியாக 829, 119,80 ரூபாவையும் வங்கி அறவிட்டது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

I.N.விஜயநாயக்க,
சிரேஷ்ட முகாமையாளர்,
அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை.

இலங்கை வங்கி ,
தலைநகரக் கிளை,
2025.09.08.

09- 184

---

**டீ எப் சீ சீ வங்கி பிஎல்சி**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

அடமானம் வைத்தோர் என்ற வகையில் நொத்தாரிசு ஜே.என்.சீ. நிரூஜா என்பவரினால் 2014.12.22 ஆந் திகதியிட்ட அடமானப் பத்திர இல.54 மற்றும் நொத்தாரிசு வி. கனகரத்தினம் என்பவரினால் 2016.01.06 ஆந் திகதியிட்ட அடமானப் பத்திர இல. 9136 மற்றும் 9138, 2018.03.08 ஆந் திகதியிட்ட அடமானப் பத்திர இல. 12036, 2020.11.11 ஆந் திகதியிட்ட அடமானப் பத்திர இல.14924 ஆகிய ஈட்டுப் பத்திரங்கள், மட்டக்களப்பு பதிவு அலுவலகத்தில் பதிவு இல. PV93695 இல் பதியப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு கம்பனி சட்டத்திற்கு அமைய முறையாக இணைக்கப்பட்ட நிறுவனமான சன்ஷயின் வூட்ஸ் என்ற (பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக டீ எப் சீ சீ வங்கி பி எல் சீ க்கு( டீ எவ் சீ சீ வர்தன வங்கி பி எல் சீ யில் வைப்பிலிடப்பட்ட ஈடு வைக்கப்பட்டு திரும்பச் செலுத்தத் தவறிய சொத்துக்கள்.

**1 ஆம் ஏல விற்பனை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பத்து செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் ஏறாவூர் பத்து செங்கலடி இல் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திருகோணமலை வீதியில் கொம்மாதுறை கிராம அலுவலர் பிரிவில் கொம்மாதுறை கிராமத்தில் அமைந்துள்ள "கொம்மாதுறை தோட்ட பூமி" என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் ஏ .ஈ.கே. திச்சவீரசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்டு 2014.10.28 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1026/ 2014 துண்டு 01 சகலதும் அளவிடப்பட்டு குறிக்கப்பட்டு 0.3035 ஹெக்டயர் அல்லது மூன்று றூட் (0ஏ.3றூ.0பே.) விஸ்தீரணத்தை அங்கு காணப்படும் கட்டடங்கள், கிணறு மற்றும் அனைத்து விதிமுறைகளும் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2025, ஒற்றோபர் மாதம் 07ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**செல்லும் வழி.-** மட்டக்களப்பு மணிக்கூட்டு சந்தியிலிருந்து திருகோணமலை வீதி மார்க்கமாக 15 கி.மீ. சென்று வரும் MPK வீதியைக் கடந்து கொம்மாதுறை சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் இடது பக்கத்தில் காணப்படும்.

2 ஆம் ஏல விற்பனை

காணி 01

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி 171- கிராம அலுவலர் பிரிவில் மண்முனல் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மட்டக்களப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வட்டாரம் 15 கல்லடி கிராமத்தில் மாரியம்மன்கோவில்வீதியில்அமைந்திருக்கும்வரிமதிப்பீட்டு இல. 25/ 4 இல் அமைந்துள்ள காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் எஸ். அந்தோனிப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்டு 2015.11.30 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. SA/ 267A/ 2015/ MN (நிலவரைபட இல. SA/ 138/2014/ MN துண்டு 01) (ஹோட்டல் ஓஷனிக் - பகுதி) "புரயடி வளவு" என்று அழைக்கப்படுகின்ற காணி வடக்கில்: வீதியும் ; கிழக்கு: துண்டு 02 எனது வரைபட இல.SA/138/2014/ MN மற்றும் வளவு உரிமையாகக் கொண்ட அன்னலட்ஷ்சுமி மற்றும் மற்றவர்கள் மற்றும் சுந்தரமோகன் மற்றும் மற்றவர்கள் ; தெற்கில்: உள்ள வளவு உரிமையாளர் அழகுராஜா; மற்றும் மேற்கில்: தடாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 0.0868 ஹெக்டயார் அல்லது முப்பத்திநாலு தசம் மூன்று மூன்று பேர்ச் (0ஏ.0றூ.34.33பே.) விஸ்தீரணத்தையும் அங்கு காணப்படும் கட்டடங்கள் மற்றும் அனைத்து விதிமுறைகளையும் கொண்டுள்ளது.

காணி 02

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி 171- கிராம அலுவலர் பிரிவில் மண்முனல் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மட்டக்களப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வட்டாரம் 15 கல்லடி கிராமத்தில் மாரியம்மன்கோவில்வீதியில்அமைந்திருக்கும்வரிமதிப்பீட்டு இல. 25/ 4 இல் அமைந்துள்ள காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் எஸ். அந்தோனிப்பிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்டு 2015.11.30 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. SA/ 267B/ 2015/ MN (நிலவரைபட இல. SA/ 138/2014/ MN துண்டு 02) (ஹோட்டல் ஓஷனிக் - பகுதி) "புரயடி வளவு" என்று அழைக்கப்படுகின்ற காணி வடக்கில்: வீதியும் ; கிழக்கில்: ஒழுங்கையும்; தெற்கில்: உள்ள வளவு உரிமையாளர் அன்னலட்ஷ்மி மற்றும் மற்றவர்கள் மேற்கில்: துண்டு என் வரைபட இல. SA/ 138/2014/ MN உடன் 0.0253 ஹெக்டயார் அல்லது பத்து தசம் சைபர் சைபர் பேர்ச் (0ஏ.0றூ.10.00பே.) விஸ்தீரணத்தையும் அங்கு காணப்படும் கட்டடங்கள் மற்றும் அனைத்து விதிமுறைகளையும் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2025, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**செல்லும் வழி.- மட்டக்களப்பு மணிக்கூட்டு** சந்தியிலிருந்து திருகோணமலை வீதி மார்க்கமாக பார் வீதியால் 1.1 கி.மீ. தூரமுள்ள புது வீதி வரை சென்று வலது பக்கத்தால் திரும்பி புது வீதி மற்றும் புதிய கல்முனை வீதியால் 90 மீ. தூரமுள்ள கல்லடி பாலத்தைக் கடந்து கல்லடி குறுக்கு வீதியால் வலது பக்கமாக திரும்பவும். பின் குறுக்கு வீதியால் 150 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** 2024.05.10 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2024.04.30ஆந் திகதிய ‘‘டெய்லி திவயின’’ , ‘‘த ஐலன்ட்’’ மற்றும் 2024.05.02ஆந் திகதிய ‘‘தினக்குரல்’’ ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் (10%);
(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி (1%) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 3,000.00 ரூபா;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 2,000 .00 ரூபா;
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு;

(7) கொள்வனவு விலையின் மிகுதி தொண்ணூறு வீதம் 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட சட்டபூர்வமான கட்டணங்கள், கடமைகள், வரிகள் அல்லது கட்டணங்கள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

‘‘ மேலும் விபரங்களுக்கு,தயவு செய்து மறுவாழ்வு மற்றும் மீட்பு துறைகளுடன் தொடர்பு கொள்க, DFCC வங்கி PLC, இல.73, டபிள்யூ ஏ டீ ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.

தொலைபேசி இல. 011-2371371.

‘‘மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச்செய்யவும் / இடைநிறுத்தவும் முடியும்’’

துசித கருணாரத்ன ,
அனுமதிபெற்ற ஏலதாரர்
மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/ 3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி இல.: 011-3068185, 2572940.

09- 153

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ - வவுனியா கிளை

பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்

**முதலாவது ஆதன இடாப்பு**

**1 ஆவது காணி;** வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா நகர சபை எல்லையினுள், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், வவுனியா நகரம் 214 கிராம அலுவலர்

பிரிவில் பசார் வீதி, வரிமதிப்பீட்டு இல. 132 என்ற முகவரியில் அமைந்துள்ள "விலதியடிக்கரம்பை" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. கருணைவேல் அவர்களால் 2003.07.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 0319 UC என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 01 இல் காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி. விஸ்தீரணம் : 42.56 சதுர அடி.

**2 ஆவது காணி;** வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா நகர சபை எல்லையினுள், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், வவுனியா நகரம் 214 கிராம அலுவலர் பிரிவில் ஆலை வீதி, வரிமதிப்பீட்டு இல. 11என்ற முகவரியில் அமைந்துள்ள "விலதியடிக்கரம்பை" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. கருணைவேல் அவர்களால் 2003.07.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 0319 UC என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 03 இல் காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி. விஸ்தீரணம் : 44.01 சதுர அடி.

**3 ஆவது காணி;** வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா நகர சபை எல்லையினுள், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், வவுனியா நகரம் 214 கிராம அலுவலர் பிரிவில் பசார் வீதி, ஆலை வீதி வரிமதிப்பீட்டு இல. 09 என்ற முகவரியில் அமைந்துள்ள "விலதியடிக்கரம்பை" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. கருணைவேல் அவர்களால் 2003.07.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 0319 UC என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 02 இல் காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி. விஸ்தீரணம் : 6.72 சதுர அடி.

**இரண்டாவது ஆதன இடாப்பு;** வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா நகர சபை எல்லையினுள், வவுனியா பிரதேச செயலாளர் வைரவபுளியங்குளம் - 214D கிராம அலுவலர் பிரிவில் வைரவபுளியங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள "குருமன்காடு அல்லது பொன்னன் ஹோட்டல் வளவு" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. கருணைவேல் அவர்களால் 2005.08.01 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 0516 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 02 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி.

விஸ்தீரணம்; ( 0.0253 ஹெக்டயார்) (0ஏ.0றூ. 10பே.) விசாலமுடைய காணியோடும், கடைக் கட்டிடத் தொகுதி மாடிகள், நீர் மற்றும் மலசல கூட பகுதி மற்றும் பழைய தங்குமிட கட்டிடப் பகுதியோடும்.

**மூன்றாவது ஆதன இடாப்பு;** வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா நகர சபை எல்லையினுள், வவுனியா பிரதேச செயலாளர் வைரவபுளியங்குளம் - 214D கிராம அலுவலர் பிரிவில் வைரவபுளியங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள " பொன்னன் ஹோட்டல் வளவு" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. கருணைவேல் அவர்களால் 2005.08.01 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 0516 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 03 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி. விஸ்தீரணம்; (0ஏ.01றூ.20.25பே.)

**நான்காவது ஆதன இடாப்பு;** வட மாகாணம், வவுனியா மாவட்டம், வவுனியா நகர சபை எல்லையினுள், வவுனியா பிரதேச செயலாளர் ரம்பைக்குளம் 244A கிராம அலுவலர் பிரிவில் சூசைப்பிள்ளையார்குளம் கிராமத்தல் அமைந்துள்ள "குருமன்காடு" என்ற பெயருடைய இல. 178984 மற்றும் 178985 என்ற TOPOPP வரைபடத்தில் லொட் இல. 6090 மற்றும் 6051 இல் காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியை பிரிக்கப்பட்ட 1/6 பங்கு, தற்பொழுது அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே.கருணைவேல் அவர்களால் 2014.07.25 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 1414 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் இல. 01 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி.

விஸ்தீரணம்; ( 0.068 ஹெக்டயார்) அல்லது (0ஏ.0றூ.26.9பே.) விசாலமுடைய காணியோடும்,கிணறு மற்றும் வீடு மற்றும் கட்டிடம் உள்ளடங்கும்.

வவுனியா, புகையிரத வீதி, இல. 70 என்ற முகவரியில் அமைந்துள்ள "ஏ குரூப் கன்ஸ்ட்ரன்ஷன் அன்ட் கன்சல்டிஸ்" என்ற தலைப்பில் மற்றும் நிறுவனத்தின் கீழ் தனி உரிமையாளாராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் பத்மநாதன் தயாபரன் கடனாளியாக புறக்கணித்து, கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள மேற்குறித்த ஆதன இடாப்பில் குறிப்பிடப்பட்ட காணி.

**முதலாவது ஆதன இடாப்பு;**

1 ஆவது காணி - லொட் 01- 2025, ஒற்றோபர் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு.

**2 ஆவது காணி** - லொட் 03- 2025, ஒற்றோபர் 17 ஆந் திகதி மு.ப. 10.15 மணிக்கு.

**3 ஆவது காணி** - லொட் 02- 2025, ஒற்றோபர் 17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு.

**இரண்டாவது ஆதன இடாப்பு;**

லொட் 02- 2025, ஒற்றோபர் 17 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு.

**மூன்றாவது ஆதன இடாப்பு;**

லொட் 03- 2025, ஒற்றோபர் 17 ஆந் திகதி ந.ப. 12.00 மணிக்கு.

**நான்காவது ஆதன இடாப்பு;**

லொட் 01- 2025, ஒற்றோபர் 17 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு.

மேல் சொல்லப்பட்ட காணிகள் என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.-** 2023.07.14 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2023.07.14ஆந் திகதியுடைய “திவயின”, “ ஐலன்ட் ” மற்றும் “வீரகேசரி” ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.-**

**முதலாவது ஆதன இடாப்பு**- 1 ஆவது, 2 ஆவது மற்றும் 3 ஆவது காணி; மல் வீதி மற்றும் பசார் வீதி மூலம் செதுனு சந்தி வடகிழக்கு பக்கமாக விடயமுடைய காணி அமைந்துள்ளது.

**இரண்டாவது ஆதன இடாப்பு-** வீதியின் வடக்கே விடயமுடைய காணி அமைந்துள்ளது. அந்த வைரவர் கோவில் வீதி சந்திப் பக்கமாக அமைந்துள்ள விடயமுடைய காணிக்கு எதிராக அமைந்துள்ள விநாயகர் பன்சல மூலம் மற்றும் வைரவர்புளியங்குளம் வீதி திரும்பி வசதியோடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**மூன்றாவது ஆதன இடாப்பு-** வீதியின் வடக்கே விடயமுடைய காணி அமைந்துள்ளது. அந்த வைரவர் கோவில் வீதி சந்திப் பக்கமாக அமைந்துள்ள விடயமுடைய காணிக்கு எதிராக அமைந்துள்ள விநாயகர் பன்சல மூலம் மற்றும் வைரவர்புளியங்குளம் வீதி திரும்பி வசதியோடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**நான்காவது ஆதன இடாப்பு-** மணிக்கூடு தூண் சந்தியில் இருந்து வவுனியா மெதவச்சி வீதி ஊடாக 250 மீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது, அங்கிருந்து 2 ஆவது ஒழுங்கை வீதியில் இடதுபக்கம் திரும்பி 510 மீற்றர் தூரம் பிரயாணிக்கவும். அத்தோடு மேற்குறித்த வீதியின் முன்னே இடதுபக்கத்தில் அமைந்துள்ள விடயமுடைய காணியை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4)நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.00 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி.
(8) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது வவுனியா கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கு;முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 15, புகையிரத வீதி, வவுனியா.
தொலைபேசி இல. :024- 2227264,
தொலைநகல் இல.024-2225138.

திரிவங்க அன்ட் சேனாநாயக்க ,
ஏலவிற்பனையாளர்கள்,
சமாதானநீதவான்,
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுபவர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 7/1/10, 1 ஆவது மாடி,
சுப்பர் மார்க்கட் கட்டிடத் தொகுதி,
பொரள்ள, கொழும்பு 08.

தொலைபேசி இல.: 011-2396520.

09- 162

## பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி. இன் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி. யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள கீழ்க்காணும் அதிகாரத்தின் பிரகாரம், கீழ் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் பின்வரும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், ( கம்பஹா பதிவுப்பிரிவிற்குள்) கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளையின் ராகம் பத்து ஜா-எல நகர சபை எல்லைக்குட்பட்ட ஜா- எல பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இந்திவிட்டிய - இல. 190E கிராம அலுவலர் பிரிவு இந்திவிட்டியவில் அமைந்துள்ள இந்திவிட்டிய பாதை வலது, வரிப்பண இல. 89/ 04 இல் கட்டிடங்கள். மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய "முல்லேவத்த " எனும் காணி ( உரிமம் பெற்ற நில அளவையாளர் K.E.J.B. பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்டு 1991, திசெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2418 இல் விபரிக்கப்பட்டுள்ள ஒன்றிணைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 மற்றும் 2 இன் மீளளவையாகும்.) உரிமம் பெற்ற நில அளவையாளர் M.D. எட்வர்ட் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2018, யூலை 12 ஆந் திகதிய வரைபட இல. 7909 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டாகும்.

( விஸ்தீரணம்; 00ஏ. 00று.11.21பே.)

2025, ஒற்றோபர் 21 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

"மதுராவல இன்டஸ்ரீஸ் " எனும் பெயர் மகுடத்தின் கீழ் மதுராவலகே தொன் அனுஷ்க பிரவீன். மதுராவலகே தொன் உபவோன் சந்தன் அன்ஜலோ மற்றும் மதுராவலகே தோன ருஷினி நிமாஷா ஆகியோரினால் கொண்டு நடாத்தப்படும் பங்குடமை வியாபாரம் "கடப்பாடுடையவர்களாகவும்" மற்றும் மதுராவலகே தொன் அனுஷ்கா பிரவீன் மற்றும் மதுராவலகே தொன் உபவோன் சந்தன் அன்ஜலோ ஆகியோர் "ஈடுவைத்தவர்களாகவும்" பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி. இன் சார்பில் நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு T.L.M.T. விஜேசிங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2018, ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 451 எனும் முதன்மை மிதக்கும் ஈட்டுமுறி மற்றும் 2019, செத்தெம்பர் 24 ஆந் திகதியிட்ட 668 எனும் மேலதிக மிதக்கும் ஈட்டுமுறி மற்றும் 2021, சனவரி 18 ஆந் திகதியிடப்பட்ட 803 எனும் மேலதிக மிதக்கும் ஈட்டுமுறி ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளனர்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2023.09.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2023.09.01ஆந் திகதிய திவயின, த ஐலன்ட் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்**: ஜா-எல பொலிஸ் நிலையத்திலிருந்து கொழும்பு பாதையினூடாக கொழும்பை நோக்கி சுமார் 500 மீற்றர் தூரம் வந்து புனித பிரான்ஸிஸ் சேவியர் பாதை அல்லது வேவல தேவாலய பாதை என சகலரினாலும் அறியப்பட்ட பாதைக்கு வலது பக்கம் திரும்பவும். அப்பாதையில் சுமார் 150 மீற்றர் தூரம் வரை வந்து ரணசிங்ஹ பாதை இந்திவிட்டியவிற்கு வலது பக்கம் திரும்பி அப்பாதையினூடாக சுமார் 750 மீற்றர் "Y" சந்தி வரை வந்து நகரசபை பாதைக்கு வலது பக்கம் திரும்பவும்.

பின்னர் அப்பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் பயணித்து நாற்சந்தி வரை வந்து இந்திவிட்டிய சுற்றுவட்டப்பாதைக்கு வலது பக்கம் திரும்பவும். இறுதியாக அப்பாதையினூடாக சுமார் 150 மீற்றர் வரை வந்து முல்லேவத்தை பாதைக்கு இடது பக்கம் திரும்பும்போது சொல்லப்பட்ட ஆதனமானது இறுதியா திரும்பும் இடத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் இடது பக்கம் அமைந்துள்ளதுடன் ஆதனமானது "இந்திவிட்டிய விளையாட்டு மைதானத்திலிருந்து " சுமார் 30 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. ஆதனமானது இந்திவிட்டிய பாதை , இல. 89/ 4 எனும் வரிப்பணத்தைக் கொண்டுள்ளது.

**கொடுப்பனவு முறை.-** கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.:

(1) கொள்முதல் விலையில் 10% ;
(2) உள்நாட்டு இறைவரி மற்றும் வெட் வரி 1% ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் கொள்முதல் விலையில் 2.5 % ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவுகள்;
(5) விற்பனை நிபந்தனை தொடர்பான நொத்தாரிசுக் அத்தாட்சிப்படுத்தல் கட்டணம்;
(6) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணமும் மற்றும் விற்பனைக்கான வேறு கட்டணங்கள்.

ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்முதலில் மிகுதி 90% பணத்தொகையை வங்கிக்கு செலுத்தல் வேண்டும். மேற்கூறிய பணத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்க வேண்டி ஏற்படுவதுடன் அவ்வாதனத்தை மீள் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.- முகாமையாளர் - கடன் அறவிடுதல் முகாமையாளர், பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி.எல்.சி., தலைமை அலுவலகம், இல.450, காலி வீதி, கொழும்பு 3.

தொலைபேசி இல. :011- 4667227/ 011- 4667214.

பீ.கே.ஈ. சேனாபத்தி ,
நீதிமன்றஆணையாளர்,
மதிப்பீட்டாளர் மற்றும்
உத்தரவுபெற்ற
ஏல விற்பனையாளர் .

இல. 134, பெத்தெகன பாதை, கோட்டை.
தொலைபேசி இல.: 011-2873656, 0777672082.

09- 173

## அமானா வங்கி பி.எல்.சி.- நிந்தவூர் கிளையின் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

மொஹமட் அலியார் மொஹமட் தாஹிர், சேகு இஸ்மாயில் மொஹமட் ரியாஸ் மற்றும் மொஹமட் அலியார் தௌசீர் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக கல்முனையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு A.M. பதுர்தீன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021. 04.29 ஆந் திகதிய 8250 ஆம் இலக்க முதன்மை ஈட்டு முறி மற்றும் அதே நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அதே திகதியிடப்பட்ட 8248 ஆம் இலக்க முதன்மை ஈட்டு முறிகளின் மூலம் அமானா வங்கி P.L.C. இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் அமானா வங்கி P.L.C. பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்

முதலாம் விற்பனை; 2025.10.24 ஆந் திகதி பி.ப. 12.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவு, நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நிந்தவூர்பற்று இல. 10, நிந்தவூர் அட்டப்பள்ளம் கிராம அலுவலர் பிரிவில் அட்டப்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ள ( இல. PPAM 422 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 இன் ஒரு பகுதி 2020.12.16 ஆந் திகதிய 1415 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 இன் மீளளவை) "வௌவால் ஓடை" எனும் லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணி. உரிமம் பெற்ற நில அளவையாளர் S.M. இப்ராஹீம் என்பவரினால் 2021.01.10 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 1446 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள் மற்றும் சகலதுமாகும் . இது 06 ஏக்கர், 0றூட் , 37.00 பேர்ச் (2.52170 ஹெக்டயார்) பரப்பளவானது.

இவ்வாதனம் கல்முனை காணிப் பதிவகத்தில் புத்தகம் பகுதி / இருமடி இல. L 136/141 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** நிந்தவூர் வைத்தியசாலை பாதை பிரதான சந்தியிலிருந்து அக்கரைப்பற்று பாதையில் அக்கரைப்பற்றை நோக்கி சுமார் 3 கிலோமீற்றர் தூரம் சென்று அட்டப்பள்ளம் மத்திய பாதையில் ( பிரதான பாதை) பள்ளி வரை வந்து அங்கிருந்து இடதுபக்கமாக திரும்பி மத்திய பாதையில் சுமார் 1.8 கிலோமீற்றர் தூரம் பிள்ளையார் கோவில் வரை வந்து அங்கிருந்து "L" வளைவு வரை வந்து அதிலிருந்து இடதுபக்கமாக திரும்பி கடற்கரை பாதையூடாக 400 மீற்றர் தூரம் சென்று "ஹாப் மூன் பீச் ரொசொர்ட்" அருகிலிருந்து வந்தால் இவ்வாதனம் முன்னால் மோட்டார் வாகனம் செல்லக்கூடிய மணற் பாதைக்கு எதிர்த்ததாக அமைந்துள்ளது.

இரண்டாம் விற்பனை; 2025.10.24 ஆந் திகதி பி.ப. 1.15 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவு, நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. 05, நிந்தவூர்பற்று கிராம அலுவலர் பிரிவில் நிந்தவூர் கிராமத்தில், 3 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள காணி

உரிமம் பெற்ற நில அளவையாளர் அஹமட் M. மஹரூப் என்பவரினால் மீளளவை செய்யப்பட்டு 2021.01.21 ஆந் திகதிய 3742/ 21 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 0.111 ஹெக்டயார் பரப்பளவானது.

இவ்வாதனம் கல்முனை காணிப் பதிவகத்தில் புத்தகப் பகுதி / இருமடி இல. LDO/ LO 8/66 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** பிரதான பாதையில் நிந்தவூர் வைத்தியசாலை சந்தியில் மக்கள் வங்கிக்கி அருகிலிருந்து வைத்தியசாலை பாதையில் வைத்தியசாலையை நோக்கி சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று மாந்தோட்டம் சந்தியில் சிறிய கடைத்தெரு வரை வந்து வலதுபக்கமாகத் திரும்பி 3 ஆம் குறுக்குத் தெருவினூடாக சுமார் 800 மீற்றர் சென்றால் இவ்வாதனம் இடதுபக்கத்தில் பாதைக்கு எதிர்த்ததாக அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2025.08.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2025.08.22 ஆந் திகதிய தினமின, டேலி மிரர் மற்றும் வீரகேசரி ஆகிய பத்திரிகைகளை பார்க்கவும்.

கொடுப்பனவு முறை.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:

01. கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்குப் பத்து);
02. பிரதேச சபை வரி 1%(நூற்றுக்கு ஒன்று);
03.ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
04. சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
05. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 3,000.00;
06.நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 3,000.00;

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். கூறப்பட்ட 90% மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள 10% பணத்தொகையை பறிமுதல் செய்து சொத்தை மீள்விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு .- கடன் அறவிடுதல் பிரதான முகாமையாளர் மையப்படுத்தல் அமானா வங்கி பி.எல்.சி. இல.486, காலி வீதி, கொழும்பு 3.
தொலைபேசி 011 - 7756000,Ext: 2112.

N.U.ஜயசூரிய ,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல.369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட, கண்டி.

தொலைபேசி - 081- 2210595, 077- 3067360, 077- 6447848.

09-179

## தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி.

### பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இல. 102, ரத்மல்கடுவ, கம்பளை எனும் முகவரியில் வசிக்கும் நிரோஷன் சத்துரங்க வீரசிங்ஹ என்பவர் கடப்பாடுடையவராக தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி. இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம்.

2025.10.21 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்திற்கு / வியாபாரத்திற்கு பொருத்தமான சொத்து.

கண்டி மாவட்டம், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு, இல. 1116 - ஜயமாலபுர கிராம அலுவலர் பிரிவு, ஜயமாலபுர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 320016 ஆம் இலக்க கெடெஸ்ரல் வரைபடத்தில் குறிக்கப்பட்ட 02 என அடையாளமிடப்பட்ட காணியின் லொட் இல. 457 , லொட் இல. 458 மற்றும் லொட் இல. 459 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டுகளும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.

காணியின் பரப்பளவு; லொட் இல. 457- 0.0141 ஹெக்டயார்
லொட் இல. 458- 0.00487 ஹெக்டயார்
லொட் இல. 459- 0.0091 ஹெக்டயார்

**ஆதனத்தை வந்தடைதல்.-**கம்பளை நகரத்திலிருந்து நாவலப்பிட்டி பிரதான பாதையில் சுமார்3.2 கிலோ மீற்றர் தூரம் சென்றால் ஜயமாலபுர ( மதகு இல. 4/2) 6 ஆம் ஒழுங்கை சந்திக்கு அருகில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2023.06.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2023.05.18 ஆந் திகதிய திவயின, த ஐலண்ட் மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும்:

01. கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்குப் பத்து);
02. பிரதேச சபை வரி 1%(நூற்றுக்கு ஒன்று);
03.ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
04. சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
05. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 3,000.00;
06.நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 3,000.00;

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள்

ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு .- முகாமையாளர்- அறவிடுதல் பிரிவு, தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி. இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி 011-2448448.

N.U.ஜயசூரிய ,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல.369/ 1,
துட்டுகெமுனு மாவத்தை,
மாவில்மட, கண்டி.

தொலைபேசி - 081- 2210595, 077- 3067360, 076- 1375993.

09-204

---

## செலான் வங்கி (பீ.எல்.சீ.) - கம்புறுபிட்டிய கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

"கடன்பட்டோர்/ அடமானம் வைத்தோர் " என்ற வகையில் கம்புருபிட்டிய பதிவு அலிவலகத்தில் பதிவு இல. PV 606 கம்பனி கூட்டிணைக்கப்பு சட்ட இலக்கம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கத்திற்கமைய சினமன் எக்ஸ்போட் ( பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்திற்காக நொத்தாரிசு டபிள்யூ. ஓ. எஸ். விதான்னந்த என்பவரால் 2022.02.08 இல் உறுதிப்படுததப்பட்ட ஈட்டுப் பத்திர இல. 1953 கம்புருப்பிட்டியவைச் சேர்ந்த தனுஷ் டிலங்கா ரனஹே என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் கங்கபட பத்து திகஹொட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பட்டுவிட்ட கிராம அலுவலர் பிரிவு, பட்டுவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள துண்டு 1B "கால்டன் எஸ்டேட்" என்று அழைக்கப்படுகின்ற பிபி மார 434 துண்டு 1 ( காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ. குணவர்தன என்பவரினால் 2004.03.14ஆந் திகதியிடப்பட்டு நிலவரைபட இல. 1436) காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் எம்.எல். எம். ரஸ்மி என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2018.05.14ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல.5426 துண்டு 1B1 சகலதும் குறிக்கப்பட்டு அறியப்பட்டு அங்கு காணப்படும் அசையும் மற்றும் அசைவற்ற உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் தற்போது அல்லது பின் வைப்பிலிடப்படும் உபகரணங்கள், கட்டடங்கள், பொருத்திகள் அல்லது கட்டட நிர்மாணங்கள் அங்கு காணப்படும் அனைத்துடனும் மட்டுப்படுத்தப்படாத மற்றைய தொடர் காணிகளும் / தொகுதிகள் தொடர்காணி வரைபடங்களும் மற்றும் தொடர்காணி பிரகடனங்களும் இருபத்தி மூன்று ஏக்கர் சைபர் தசம் சைபர் எட்டு பேர்ச். (23ஏ.0றூ.0.08பே.) விஸ்தீரணத்தை துண்டு 1B1 கொண்டுள்ளது.

2. தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் கங்கபட பத்து திகஹொட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பட்டுவிட்ட கிராம அலுவலர் பிரிவு, பட்டுவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள துண்டு 1B "கால்டன் எஸ்டேட்" என்று அழைக்கப்படுகின்ற பிபி மார 434 துண்டு 1 ( காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ. குணவர்தன என்பவரினால் 2004.03.14ஆந் திகதியிடப்பட்டு நிலவரைபட இல. 1436) காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் எம்.எல். எம். ரஸ்மி என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2018.05.14ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல.5426 துண்டு 1B2 சகலதும் குறிக்கப்பட்டு அறியப்பட்டு அங்கு காணப்படும் அசையும் மற்றும் அசைவற்ற உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் தற்போது அல்லது பின் வைப்பிலிடப்படும் உபகரணங்கள், கட்டடங்கள், பொருத்திகள் அல்லது கட்டட நிர்மாணங்கள் அங்கு காணப்படும் அனைத்துடனும் மட்டுப்படுத்தப்படாத மற்றைய தொடர் காணிகளும் / தொகுதிகள் தொடர் காணி வரைபடங்களும் மற்றும் தொடர்காணி பிரகடனங்களும் ஒரு ஏக்கர் மூன்று றூட் பதின்நான்கு தசம் ஆறு ஆறு பேர்ச். (1ஏ.3றூ.14.66பே.) விஸ்தீரணத்தை துண்டு 1B2 கொண்டுள்ளது.

3. தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் கங்கபட பத்து திகஹொட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பட்டுவிட்ட கிராம அலுவலர் பிரிவு, பட்டுவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள துண்டு 1B "கால்டன் எஸ்டேட்" என்று அழைக்கப்படுகின்ற பிபி மார 434 துண்டு 1 ( காணி அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ. குணவர்தன என்பவரினால் 2004.03.14 ஆந் திகதியிடப்பட்டு நில வரைபட இல. 1436) காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் எம்.எல். எம். ரஸ்மி என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2018.05.14ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல.5426 துண்டு 1B4 சகலதும் குறிக்கப்பட்டு அறியப்பட்டு அங்கு காணப்படும் அசையும் மற்றும் அசைவற்ற உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் தற்போது அல்லது பின் வைப்பிலிடப்படும் உபகரணங்கள் கட்டடங்கள் பொருத்திகள் அல்லது கட்டட நிர்மாணங்கள் அங்கு காணப்படும் அனைத்துடனும் மட்டுப்படுத்தப்படாத மற்றைய தொடர் காணிகளும் / தொகுதிகள் தொடர்காணி வரைபடங்களும் மற்றும் தொடர் காணி பிரகடனங்களும் பதினாறு ஏக்கர் இரண்டு றூட் பதினெட்டு தசம் மூன்று ஏழு பேர்ச். (16ஏ.2றூ.18.37பே.) விஸ்தீரணத்தை துண்டு 1B4 கொண்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள சொத்தை 2025, ஒற்றோபர் 08 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ, இல. 90, காலி வீதி, கொழும்பு 03 (வாகனம் நிறுத்தும் வளாகத்தில்) பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** மாத்தறையிலிருந்து ஹக்மான வீதி மார்க்கமாக சுமார் 8.8 கி.மீ. தூரமுள்ள திகசோட சந்தி வரை சென்று பின் வலது பக்கமாகத் திரும்பு 9.8 கி.மீ. தூரமுள்ள ஹக்மான வரை சென்று பிரதேச சபை வீதியால் 400 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வீதியின் இரு பகுதியிலும் அமைந்திருக்கும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-*** 2025.08.15ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியி மற்றும் 2025.08.12 ஆந் திகதிய ''டெயிலி மோனிங்", " அருண" மற்றும் ''தமிழன்'' ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் .-**வெற்றிகரமான கொள்வன வுதாரர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்:

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (1%) ;
(3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 3,000.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 2,000.00;

(6) ஏல விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

மேலதிக விபரங்களுக்கு: "உதவி பொது முகாமையாளர் சட்டம், செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03 " என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

தொலைபேசி இலக்கங்கள்: 011-2456494, 011-2456498 .

மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்.

துசித் கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி என்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.

தொலைபேசி; 0113068185, 2572940.

09- 178